செ.வெ.எண் : 11/ செப்டம்பர் நாள் : 08.09.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**ஓய்வூதியர் குறைதீர் கூட்டம் 24.09.2021 அன்று நடைபெறும்
என மாவட்ட ஆட்சித் தலைவர்
முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தகவல் தெரிவித்துள்ளார்.**

இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசுத்துறை ஓய்வூதியர் குறைதீர் கூட்டம் 24.09.2021-அன்று காலை 10.30 மணியளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் ஓய்வூதிய இயக்குநர், சென்னை, அவர்கள் முன்னிலையில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. இக்குறைதீர் கூட்டத்தில் ஓய்வூதியர்கள் மற்றும் ஓய்வூதியர் சங்க பிரதிநிதிகள் தங்களது ஓய்வூதியம் தொடர்பான குறைகளை முன்மனுக்களாக "ஓய்வூதியர் குறை தீர்க்கும் நாள் மனு" "மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம்" என முகவரியிட்டு இரட்டைப்பிரதிகளில் 18.09.2021-க்குள் அனுப்பி வைக்கவும், விண்ணப்பம் அனுப்பிய ஓய்வூதியதாரர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கோவிட்-19 பாதுகாப்பு நெறிமுறைகளை கடைபிடித்து சமூக இடைவெளியைப்பின்பற்றி முககவசம் அணிந்து கலந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**

**"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்
சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"**